திரு. சோ. அழகர்சாமி: அவர்கள் உண்ணாவிரதத்தை நிறுத்திவிட்டார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடிந்த பிறகு பிரச்னையை எழுப்பக் கூடாது. அதுபற்றி ஏற்கனவே தீர்ப்புக் கொடுத்தாகி விட்டது. முடியுமானால் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: உண்ணாவிரதத்தை கைவிடும்படி கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. பெரும்பாலும் அதை ஏற்று, விட்டுவிடுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

(ஆ) சென்னையில் ஆசிரியர்கள் கைது செய்யப்பெற்றுள்ளதால் தோன்றியுள்ள பதட்ட நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, ''30—7—1977 அன்று மாலை $4\frac{1}{2}$ மணி அளவில் சென்னையில் 133 ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டதும், அதுபற்றி எழுந்துள்ள பதட்ட நிலை குறித்தும்'' விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று திரு. மு. அம்பிகாபதி அவர்களும், திரு. கே. கந்தசாமி அவர்களும் தீர்மானம், கொடுத்துள்ளார்கள். இது எப்படி அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சுருக்கமாக விளக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே 133 ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அப்படி கைது செய்யப்பட்டு, காவல் நிலையத்திலே எந்தவிதமான பராமரிப்பும் செய்யப்படாமல், அலட்சியம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த அலட்சிய முறையைப் பற்றிச் சுட்டிக்காட்டியபோது, அதிகாரிகள் தவறாகப் பேசியதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

இப்படி ஆசிரியர்கள் இந்தச் சூழ்நிலையிலே, இந்தக் காலத்திலே அவர்களை கைது செய்தது சரியல்ல. எனவே, இந்த அவையை ஒத்தி வைத்து, 133 ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டது பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மாநில ஆசிரியர்கள் கூட்டணி சார்பாக ஏற்கனவே நடந்து கொண்டிருந்த ஒரு மாநாட்டைத் தடுக்க வேண்டுமென்று இவர்கள் போனபோது கைது செய்யப்பட்டதாகவும் அவர்கள் பின்னால் விடுதலை செய்யப்பட்டதாகவும் கூறுகிறார்கள்.

இவர்கள் எந்தவிதமான சட்ட விரோதச் செயல்களிலும் ஈடுபடவில்லை. எந்தவித வன்முறைச் செயல்களிலும் இறங்காமல் அமைதியாகத் தங்களுடைய எதிர்ப்புக் கருத்துக்களை மாத்திரம் சட்டத்திற்கு உட்பட்ட முறையில் தெரிவித்திருக்கிறார்கள். அப்போது போலீஸ்காரர்களால் கைது செய்யப்பட்டு காவல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்படக்கூடிய வேண்டாத நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த நிலை பற்றி அரசுக்குத் தெளிவான தகவல்கள் இருந்தால் அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைத்து இதைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்று அழுத்தமாகக் கூற விரும்பவில்லை. இல்லை என்றால் இப்படிப் பட்ட நிகழ்ச்சிகள் நிகழாவண்ணம் தடுக்க இதுபற்றி விவாதிக்க அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் பத்தாவது மாநாடு கடந்த ஜூலை மாதம் 30, 31 ஆகிய தேதிகள் சென்னை பெரியார் திடலில் நடந்தது.

இந்தப் பேரவையின் எதிர்ப்பாளர்கள் 133 பேர் பொதுச் செயலாளர் திரு. ஈஸ்வரன் தலைமையில், மூர் அங்காடியிலிருந்து பெரியார் திடல் நோக்கி ஊர்வலமாக வந்து, மாநாடு நடக்கும் இடத்தில், மாநாடு அமைதியாக நடப்பதற்குக் குந்தகம் விளைவிக்கும் எண்ணத்துடன் 30—7—1977 அன்று மாலை 5-30 மணிக்கு உள்ளே புக முயற்சித்தனர். ஆயிரக்கணக்கான பிரதிநிதிகள் பெரியார் திடலின் உள்ளேயிருந்ததால், எதிர்ப்பாளர்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை. அனுமதிக்கப்பட்டிருந்தால், உயிர்ச் சேதங்கள் ஏற்படக்கூடிய கலவரங்கள் நிகழ்ந்திருக்கும். ஆகவே, அவர்கள் கைது செய்யப்பட்டு, பின்பு சொந்த ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டனர். அவர்கள் மீது இ.பி.கோ. 147, 448, 511 ஆகிய பிரிவுகளின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு மறுநாள், அதாவது 31—7—1977 அன்றும் திரு. ஈஸ்வரன் தலைமையில் 132 பேர்கள் பெரியார் திடல் அருகில் கூடி, அமைதியான முறையில் தங்கள் அதிருப்தியைத் தெரிவித்துக் கொண்டனர். இதற்கு அவர்களுக்கு காவல்துறை அனுமதியளித்திருக்கிறது. இதில் அன்றாட நிர்வாகப் பிரச்சினைதான் அடங்கியுள்ளதேயன்றி, மற்றப்படி சீர்கேடான நிலைமை எதுவுமில்லை. ஆகவே, இதுகுறித்து பேரவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

1977 ஆகஸ்டு 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

(இ) மதுரை சட்டக் கல்லூரி மாணவர்கள் வேலைநிறுத்தம் செய்து வருவதும், அரசு தக்க நடவடிக்கை எடுக்கத் தவறுவதும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "மதுரை சட்டக் கல்லூரி மாணவர்கள் 500 பேர் வேலை நிறுத்தம் செய்து வருவது குறித்தும் அரசு தக்க நடவடிக்கை எடுக்கத் தவறுவது குறித்தும்" விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று திரு. ஓ. சுப்பிரமணியன் அவர்களும், திரு. எஸ். சண்முகம் அவர்களும் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதுகுறித்து சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

*திரு. ஓ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே மதுரை சட்டக் கல்லூரி மாணவர்கள் 500 பேர் வேலைநிறுத்தம் செய்து வருகிறார்கள். இதுபோல் கல்லூரி மாணவர்கள் பல இடங்களில் வேலைநிறுத்தம் செய்து வருகிறார்கள். இதனால் அவர்களுடைய படிப்பு வீணாகிறது. எனவே, இந்த விஷயத்தை ஆராய்ந்து தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டியது அவசியம். சமீப நாட்களில் சென்னையிலும் மற்றும் பெரிய நகரங்களிலும் உள்ள கல்லூரிகளில் தொடர்ச்சியாக வேலைநிறுத்தம், உண்ணாவிரதம் போன்ற நிகழ்ச்சிகள் நடந்து வருகின்றன. மக்களுடைய வரிப் பணத்திலிருந்து செலவு செய்யப்பட்டு வரும் கல்லூரிகள் இந்த நிலையில் இருப்பதால் வருங்கால சந்ததியினரான மாணவ சமுதாயத்தில் கொந்தளிப்பும், உணர்ச்சியும் மிகுதியாக ஏற்பட்டிருக்கிறது. அதைப்பற்றிப் பிரஸ்தாபிக்கும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில கட்சிகள் அதை ஊக்குவிக்கின்றார்கள் என்று சொன்னார்கள். அப்போது எந்தக் கட்சிகள் என்று குறிப்பிட்டுக் கேட்டபோது காலம் வரும்போது சொல்லுகிறேன் என்று சொன்னார்கள். காலம் வரும் வரை காத்திருக்காது உடனடியாகக் கூறவேண்டுமென்ற நிலையில், இதை அவசியமான பிரச்சினையாகக் கருதி, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)